விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 27 ஞாயிற்றுக்கிழமை (10.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173




## ஹெகலிய ரம்புக்வெல மீது நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழு விசாரணை நடத்தவேண்டும்

### ஐ.தே.கட்சி எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை குறித்து நாடாளுமன்றத்தில் பொய்யான தகவலைத் தெரிவித்தமைக்காக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மீது நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழு விசாரணை நடத்தவேண்டுமென்று ஐக்கிய தேசியக்கட்சியின்கொழும்புமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் தலதா அத்துகொறள வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இப் பிரச்சினையை முன்வைத்து தலதா அத்துக் கொறள பேசுகையில்;

கொழும்பில் விடுதிகளில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்று தியாகராஜா மகேஸ்வரன் தெரிவித்தபோது அதற்கு (06 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறலை ஆராய்வதற்கு விசேட ஆணைக்குழுவை அமைக்க வேண்டும்

### ஜனாதிபதிக்கு அகாஷி ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராயவென விசேட ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைக்கவேண்டுமென யப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி கேட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறுகையில், பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்படும்போது உயர் மட்ட அதிகாரிகள் தவறிழைக்காது செயற்பட வேண்டும்.

அதேபோல் அவ் அதிகாரிகளின் செயற்பாடுகளை கண்காணிப்பதும் அவசியமாகும். பயங்கரவாதத்திற்கு (06 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை வரும் பிரிட்டிஷ் அமைச்சர்

# விடுதலைப்புலிகளுடன் பேசுமாறு அரசை கட்டாயப்படுத்துவார்!

(லண்டன்)

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் கிங்கோ வல்ஸ் நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ளார். இலங்கை வரும் அவர் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசைக்கட்டாயப்படுத்துவார்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தலைவிரித்தாடுவதாக குற்றஞ்சாட்டி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதத்திற்குப் பின்னர் அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்வது முக்கியமானதோர் விடயமென இராஜதந்திரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் அனைத்துக் கட்சிக்குழு ஆதரவில் இலங்கை அரசு –விடுதலைப்புலிகள் – நோர்வே ஆகிய முத்தரப்பினர் அடங்கிய மாநாட்டை லண்டனில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வரும் வேளையில் பிரித்தானிய மாநாட்டில் இலங்கை அரசை பங்குபற்றுமாறும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் கேட்டுக்கொள்வார்.

அதேநேரம் பிரிட்டனில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள், மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் இவ் விஜயத்தின்போது வெளிவிவகார அமைச்சர் ஆராய்வார்.

இதேவேளை இலங்கையின் மனித உரிமை மீறல்கள் எல்லை கடந்து விட்டதாகக் கூறி இலங்கைக்கான நிதியுதவியை பிரிட்டன் நிறுத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக் கது.

இலங்கைக்கு வரும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர்; ஜனாதிபதி ,பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளார். (ந)

## மீட்கப்பட்ட 9 சடலங்கள் மரபணுப் பரிசோதனையில்



(கொழும்பு)

வென்னப்புவ தும்மலதெனிய பகுதியிலிருந்து மீட்கப்பட்ட 9 சடலங்கள் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ள சடலங்கள் கொழும்பு றாகம போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. உருக்குலைந்த நிலையில் உள்ள இச் சடலங்கள் மரபணுப்பரிசோதனைக்கு உள்

## கடந்த 48 மணிநேரத்தில்

டுள்ளன. உருக்குலைந்த நிலையில் உள்ள இச் சடலங்கள் மரபணுப்பரிசோதனைக்கு உள்ளாக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

## கடந்த 48 மணிநேரத்தில்

# 30 புலிகளை கொன்றுள்ளதாக இராணுவத் தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் தொப்பிக்கலவுக்கு அண்மித்த பகுதியில் கடந்த 48 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் நான்கு முகாம்களை தாம் கைப்பற்றியிருப்பதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின்போது 30 இற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் என தகவல் கிடைத்துள்ளதாகக் கூறும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது விடுதலைப்புலிகளின் எட்டுச் (06 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் இருந்து தமிழர் வெளியேற்றப்பட்டதை 324 சர்வதேச ஊடகங்கள் கண்டித்துள்ளன

## ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை பாரிய மனித உரிமை மீறலென சர்வதேச ஊடகங்கள் தெரிவித்திருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

324 சர்வதேச ஊடகங்கள் இதனைக் கூறியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். நுவரேலியாவில் நேற்று இடம் பெற்ற இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச் செயற்பாட்டின் மூலம் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தனி நாட்டிற்கு வழியை ஏற்படுத்தியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை எதிர்வரும் காலத்தில் (06 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சியின் செயற்பாடுகள் புலிகளுக்குச் சாதகமாகவுள்ளன

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படுத்தாதவகையில் படையினரும் பொலிஸாரும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற பொழுது ஐக்கிய தேசியக்கட்சியினர் படையினரை மனதளவில் பாதிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய பலர் கொழும்பில் எந்நேரமும் சுற்றித்திரிந்து கொண்டிருக்கின்ற வேளையில் கொழும்பு நகர பாதுகாப்புடன் தொடர்புபட்டுள்ள அதிகாரிகளின் பெயர்களை வெளியிட்டு உரையாற்றுவதால் அவர்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சரும் அரசாங்கத்தின் பிரதான கொறடாவுமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாய்மூல வினாக்களுக்கான நேரத்திற்குப் பின்னர் சிறப்புக்கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அவசரகாலச்சட்டம் மீதான விவாதத்தை எதிர்க்கட்சி சார்பாக ஆரம்பித்துவைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்ன (06 ஆம் பக்கம் பார்க்க)

# அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II இற்கான நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ந)

# கொழும்பில் தமிழர் வெளியேற்றம் இந்திய அரசு தலையிட வேண்டும்

## ஆசிய மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்து

(கொழும்பு)

தலைநகர் கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்ட விவகாரத்தில் இந்திய அரசாங்கம் மற்றும் தமிழக ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை தலையிட வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் வலியுறுத்தியுள்ளது.

புதுடில்லியில் ஆசிய மனித உரிமைகள் ஆணையகத்தின் இயக்குநர் சுகாஸ் சக்மா வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தால் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனச்சுத்திகரிப்பு உள்ளிட்ட இனவாத நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய அரசாங்கமும் திராவிட முன்னேற்றக் கழகமும் தலையிட வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி 500ற்கும் மேற்பட்ட தமிழ்ப்பெண்கள் மற்றும் குழந்தைகள் விலங்குகளைப் போல் பேருந்துகளில் அடைத்து வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

தங்களது உடைமைகளை எடுத்துச் செல்ல அரைமணி நேரந்தான் காலஅவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து தமிழர்களை வெளியேற்றிய நடவடிக்கையானது ஹோல்கொஸ்ட்டை நினைவுபடுத்துவதாகவுள்ளது.

கொழும்பு நகரிலிருந்து தமிழர்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலையிட வேண்டும். தமிழர்கள் வெளியேற்றமானது இனங்களுக்கிடையே பாரிய பிளவை ஏற்படுத்தியிருக்கின்றது.

எந்தவொரு குடிமக்கள் சமூகத்திலும் இத்தகைய இனவெறி மற்றும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளை ஏற்க முடியாது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# நாட்டைப் பிரிக்க ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இறங்கியிருப்பதாக மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழ் மக்களை வெளியேற்றியதனை எதிர்த்து நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டத்தின் போதே மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்புக் குழுவின் தலைவரான சிறீதுங்கா ஜெயசூர்ய தெரிவித்துள்ளதாவது,

இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவை அரச தரப்பு இழப்பதற்கு முயன்று வருகின்றது. அரசு நாட்டைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இம் முயற்சியில் தனது முதலடியை மகிந்த ராஜபக்ஷ வைத்துள்ளார். அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல பொய் கூறி வருகின்றார் என்றார் அவர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட இடதுசாரி முன்னணியின் தலைவரான விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளதாவது,

எந்தச் சட்டத்தின்அடிப்படையில் அதிகாரிகள் தமிழ் மக்களை கொழும்பை விட்டு அகற்றியுள்ளனர்? ஹிட்லரின் நாசி அரசு இரண்டாம் உலகப் போரில் யூத மக்களை துரத்தியது போன்றதே தமிழ் மக்களை வெளியேற்றிய நடவடிக்கை.

தமிழ் மக்கள் மிருகங்களைப் போல் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவோ குடிநீரோ வழங்கப்படவில்லை என்றார் அவர்.

அரசின் இந்தச் செயல் பிரபாகரனின் கரத்தை பலப்படுத்தும் செயல் எனவும் இலங்கையில் வாழும் மக்கள் எங்கும் வாழும் உரிமை உள்ளவர்கள் எனவும் போருக்கு எதிரான முன்னணியைச் சேர்ந்த மடம்பகம அசாஜி தேரர் தெரிவித்தார். (ந-5)

# அரச சேவை ஆட்சேர்ப்புக்கு இரு மொழி அறிவு அவசியம்

## புதிய சுற்றுநிருபம் வெளியாகியது

(கொழும்பு)

அரச சேவைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான சுற்றுநிருபத்தை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின்படி தமிழ், சிங்களம் ஆகியன உத்தியோகபூர்வ மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் இவ்வருடம் ஜூலை முதலாம் திகதி முதல் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள் மாத்திரம் அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர் எனவும் ஒரு மொழியில் தேர்ச்சி பெற்ற ஒருவர் மற்றமொழியில் தேர்ச்சி பெறுவதற்கு ஐந்து வருட கால அவகாசம் வழங்கப்படும்.

அரச சேவையில் புதிதாக அமுல்படுத்தப் படவுள்ள மொழித் தேர்ச்சிக் கொள்கைக்கமைய அரச சேவையாளர்கள் மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

முதலாவது வகையினரான உயர் மட்ட அதிகாரிகள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்போது சிங்களம் அல்லது தமிழ் மொழியினை பிரதான பாடமாக சித்தியடைந்திருப்பின் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

இரண்டாவது வகையினரான உத்தியோகஸ்தர்கள் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இடைநிலைக் கல்வித் தரத்திற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைய வேணடும்.

மூன்றாவது வகையினரான உத்தியோகஸ்தர்கள் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆரம்ப நிலை பரீட்சையில் சித்தியடைய வேண்டும். (ந)

# பாலர் பாடசாலை விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முடமாவடி ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் 7-வது வருடாந்த விளையாட்டுவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறும் நிகழ்வில் பாடசாலைப் பொறுப்பாசிரியர் செல்வி வசந்தி வீரமுத்து தலைமை தாங்கவுள்ளார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவனீதம் ஜெகதீசன், சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர் இ.இராசலிங்கம், யாழ்.மாவட்ட விற்பனை முகாமையாளர் ஜே.ஜெயகுலராஜா, கௌரவ விருந்தினர்களாகப் பாலர் கல்விக் கழகத்தின் தலைவர் சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன், பாலர் கல்விக் கழகத்தின் செயலாளர் திருமதி தெ. இரத்தினகோபால் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-3)

# நாட்டிற்குப் பொருத்தமான புதிய உயர்கல்விக் கொள்கை

## அரசு ஆராய்கிறதென பேராசிரியர் விஸ்வ வர்ணபால தகவல்

(கொழும்பு)

நாட்டிற்கு பொருத்தமான உயர் கல்விக் கொள்கை ஒன்றை முன்வைப்பதுகுறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. நாட்டின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழக நூலக கலாசாரம் மற்றும் அது தொடர்பான கல்வி முறையில் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்திலும் புதிய கொள்கை அமையுமென உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

பல்கலைக்கழக நூலகர்களின் மூன்றாவது வருடாந்த மாநாட்டை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் காலை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய பட்டதாரி மாணவர்கள் சான்றிதழும் பதவியும் கிடைத்து விட்டால் போதுமென எண்ணுகின்றார்கள். நீண்டகாலத் திட்டம் எதுவுமில்லாத கல்வி முறைகளால் கற்றறியும் நல்ல பண்புகள் தற்போதைய மாணவர்களிடம் அரிதாகவே காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தை கட்டி எழுப்ப நூலகங்களை மாணவர்கள் பயன்படுத்த வேண்டும். நூலகங்கள் நவீன முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கற்றலுக்கான நிலையங்களாக நூலகங்கள் மாற வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். (ந)

# இடம்பெயர்ந்தோர், நலிவுற்றோருக்கான ஏப்ரல் மாத நிவாரணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்கு முன் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்குமான ஏப்ரல் மாத இலவச நிவாரண விநியோகத்தை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இவ்விநியோகம் தொடர்பாக சகல பிரதேச செயலர்களுக்கும் யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். அதில் இந் நிவாரண விநியோகத்தை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி விநியோகத்திற்கான பொருள்கள் ஒதுக்கீட்டின் பிரகாரம் சேவைக் கட்டணத்திற்குரிய பொருள்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருள்களின் விலை மற்றும் அங்கத்தவர்கள் அடிப்படையிலான பொருள் கொடுப்பனவு விபரம் வருமாறு,

| | விலை | 1 அங்.(Kg) | 2 அங். | 3 அங். | 4 அங். | 5 அங்.மேல் |
|---|---|---|---|---|---|---|
| அரிசி (சம்பா) | 45.50 | 2.200 | 4.950 | 6.000 | 6.800 | 9.700 |
| மா | 48.20 | 2.000 | 3.000 | 6.000 | 6.500 | 9.000 |
| சீனி | 63.00 | 1.500 | 2.500 | 3.000 | 4.000 | 4.000 |
| பருப்பு | 88.50 | 0.500 | 1.000 | 1.000 | 1.500 | 1.500 |
| மொத்தம் | | 336.00 | 616.00 | 840.00 | 1008.00 | 1260.00 |

# வடமராட்சி பி.சபைப் பணியாளர் கொழும்பில் காணாமல் போயுள்ளார்

(யாழ்ப்பாணம்)

தலைநகர் கொழும்புக்குச் சென்ற வடமராட்சி பிரதேச சபை பணியாளரான கனகரட்ணம் முகுந்தன் (வயது-29) கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச சபைப் பணி தொடர்பாகக் கொழும்பு சென்ற இவர் கடந்த மே மாதம் 8 ஆம் திகதி திருகோணமலையிலுள்ள தனது சகோதரரைப் பார்ப்பதற்குக் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்குச்சென்றுள்ளார்.

அதன் பின்னர் அவரது நிலைமை குறித்து எதுவித தகவலும் கிடைக்கப்பெறவில்லை. இதுகுறித்து முகுந்தனின் தந்தை கே.கனகரட்ணம் மனித உரிமை ஆணையகம் மற்றும் காணாமல் போனோர் தொடர்பான கண்காணிப்புக் குழு ஆகியவற்றிடம் முறைப்பாடு செய்துள்ளார். (ந-5)

*சிவசர்வசிவ சிவமுருகசிவ*

**10.06.2007 ஆம் நாளில் நல்லூர்க் கந்தசுவாமிக் கோயிலில் சங்காபிசேகமும் மணவாளக் கோலமும் கும்பாபிசேகத் தின விழாச் சிறப்புக் கவிதை.**

**நல்லூர்ப் பெருமணம் மணவாளக்கோலமே!**
**உலகமகா சமாதானம் நல்லூர்முருகாதா!**

-நல்லூர்சிவமுருகன்-என்-தமிழ்மகன். (குருக்கள்; பீ.ஏ.)-

நல்லூர்த் திருமணம் நல்லூர்ப் பெருமணம்
நல்லூராதி ஆறுமுகன் நீலமயில் வேலனுக்கு
நல்லைவள்ளி தெய்வானை நல்லைவேலன் துணைவிகள்
நல்லூர்மண வாளக்கோலம் நதிஅபிசேகம் சங்காபிசேகம்
நல்லூரின் வீதிக்கோயில் நாதசுரம் தவில்கீதம்
நம்தாயகம் வீதியெலாம் நம்தேசசமா தானனேவாழி
எல்லையில்லா கருணைத்தேவே எம்காவலனேநீ தமிழ்நல்லூரில்
உலகமகா சமாதானம் ஈழத்தமிழ் முருகாநீதாதா (117)



SATS - TECH 7- வது ஆண்டில்...

இதோ! விரல் நுனியில் உலகை உங்கள் வசம் தருகின்றோம்.சாதாரண டீவி அன்ரனாவை பொருத்தும்விலைக்கு அண்மையாக சன் டீவி/சன் நியூஸ்/ஜெயா டீவி/பொதிகை, DD Sports, Head Lines Today, DD 1 உட்பட்ட 44 சனல்கள் Digital DVD தரத்துடன் மாதாந்த கட்டணம் எதுவுமின்றி கண்டு களிக்கலாம்.

உத்தரவாதம் நிபந்தனைக்கு உட்பட்டது

KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம் உத்தரவாதத்துடன் Rs.9000/=ல் இருந்து

மேலதிக விபரங்களுக்கு:-
SATS-TECH ENGINEERS
இல.182, கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டி சேச் அருகில்,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

Phone:- (021)222 5908
Hot Line 0777 710785

(c-103)

# எண்சோதிடம் 2

(சென்றவாரத் தொடர்ச்சி....)

கொழும்பு நகரம் தீப்பிடிக்கும், பெரிய ஆலைகள் சொத்துக்களை விற்றுவிட்டு, பையன்களையும் வெளிநாடுகளுக்கு கல்வி கற்க அனுப்பிவிடுங்கள் என்று இலங்கை அன்பர்கள் எல்லோரிடமும் 1978 -ம் வருஷமே பலமுறை சொல்லி வந்தேன் 1983 ஏப்ரலுக்குள் சொத்துக்களை விற்றுவிட வேண்டுமென்று. ஆனால் சிலர் மட்டும்தான் மேஜை ,நாற்காலிகளைக்கூட வெளியேற்றினர். சிலர் விளையாட்டாக இருந்துவிட்டார்கள். முழுமனதுடன் செயல்படவில்லை. இம் மாதிரி விஷயங்கள் தனிப்பட்ட முறையில் தான் சொல்லலாம். பகிரங்கப்படுத்தினால் தீமைகளே அதிகமாகும்.

20ஆம் திகதியைப் பற்றி யாவரும் பயப்படும்படி எழுத நேர்ந்தது. உண்மையை மறைக்கலாகாதெனக் கருதி ஓர் உதாரணம் போதுமானது. இப்பொழுது இங்கிலாந்து அரசியாக உள்ள எலிஸபெத் மஹாராணியாரின் தாயார் மேரி ராணியார் 26ஆம் திகதி பிறந்தவர். அவர் ஆறாம் ஜார்ஜ் மன்னரின் பட்டத்தரசியாக சிம்மாஸனம் ஏறும்போது அதற்குப் பெயர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். சூரியன் அஸ்தமிக்காத ராஜ்யமாக உலகெங்கும் பரவியிருந்தது. 1951ல் ஜார்ஜ் மன்னர் இறந்து மேரி ராணியார் சிம்மாஸனத்தை விட்டு இறங்கும்போது உலக சாம்ராஜ்யத்தை இங்கிலாந்து முழுவதுமாக இழந்து இங்கிலாந்து, ஸ்காட்லந்து ,அயர்லாந்துதான் மிச்சம். இப்படியிருக்க சில இளைஞர்கள் 26ஆம் திகதி பிறந்துள்ள பெண்ணையே காதலிக்கிறேன். திருமணம் செய்து கொள்ளலாமா எனக் கேட்கும்போது சாம்ராஜ்யங்களுக்கே இந்தக் கதி யோசித்து செய் என்று தான் சொல்ல வேண்டிருக்கிறது.

இதனால் ஒருவரும் மனம் தளர வேண்டாமென்பதே இந் நூற் கருத்து. அன்பர்களது பெண் பிள்ளைகள் இம் மாதிரி திகதிகளில் பிறந்தவர்களுக்கும் நான் தகுந்தபடி விவாகம் செய்யச் சொல்லி தீமையே நிகழாதெனும் படியான நாட்களில் விவாகம் அமைத்துக்கொடுத்து இன்று வரை நன்றாகவே செல்வச் சிறப்புடன் வாழ்கின்றனர். தீமை நம்மை பாதிக்காமல் இருக்கும் வழியை உணர்த்துவதே இந்நூல். பல ஜோதிட வல்லுநர்கள் என்னிடம் இந்த சாஸ்திரம் நன்றாக பலன் தருகிறது. ஆனால் நூல்களில் நவக்கிரகங்கள் பூரண வலிமையுடையவை. அவைகளின் ஆதிக்கத்திலிருந்து ஸ்ரீபரமேஸ்வரன் கூடத் தப்பியதில்லை என்று சொல்கிறார்களே எனக்கேட்டதுண்டு. அதற்கு நான் வழக்கமாகக் கூறும் பதில் இதுதான். எல்லா கிரகங்களும் அவரவர் இயல்பின்படி இயங்குகின்றன.

இதில் நடுநாயகமாகக் கூறப்படும் சூரியன் தான் நமக்கு சுலபமாக கண்ணுக்கு தினம் தோறும் தெரிந்ததன் கிரணங்களால் வெளிச்சத்தையும் உயிர் சக்தியையும் அளிக்கிறவர் நம்மைப் பாதிக்கும்படி சித்திரை, வைகாசி மாதங்களில் பூமியை அதிக சூடு பண்ணுகிறவர். இம் மாதங்களில் நாம் வீட்டை விட்டு வெளியேறி ஒரு இடத்திற்குப் போக வேண்டுமானால் (இந்த அனுபவம் சிந்து, ராஜஸ்தான் போன்ற பிரதேசங்களில் பாலைவனங்கள் - வாழ்பவர்களது பெரிய பிரச்சினை) தலை சுற்றும், கால் சுடும் போக முடியாது. பிராணாபத்தும் விளையும். ஆனால் காலில் செருப்பும், தலையில் குல்லாவும், கையில் குடையும் எடுத்துப் போனால் வெகுவான பாதிப்பின்றி போய்விடலாம். காரிலோ பஸ்ஸிலோ போனால் தலை, கால் பாதிக்காது. ஏர்கண்டிஷன் காரில் போனால் வெய்யில் விஷயமே நாம் உணராமல் போய் விடலாம்.

இம்மாதிரி சூரிய வெப்பத்திலிருந்து தப்பிப் போவதை சூரியன் ஒரு நாளும் தடை செய்யமாட்டார். ஆகாய முழுவதும் பந்தல் போட நம்மாலும் முடியாது, நம்மைக் காப்பாற்றிக்கொண்டால் போதுமென நினைத்தே ஆவனசெய்யவேண்டும்.

இதனால் நாம் சூரியனின் வெப்பத்தையும் தணிக்கவில்லை. இந்த முறையில்தான் கிரகங்களின் தீய சக்திகளிலிருந்து தனி மனிதர்களோ வியாபார ஸ்தலங்களோ தன்னை பாதிக்காத படியான எண்களைப் பெயரில் கொண்டு தப்பிப்பது நன்மையடைவது. (விதி கால் சுட்டுத் தான் தீரும் என்பதை முயற்சியில் நம்பிக்கையில்லாத வாதம்) வெய்யில், சூடு இவைகள் தான் விதி. மாட்டிக்கொள்வதும் தப்பிப்பதும் நம் பிரயத்தனத்தையும் புத்திசாலித்தனத்தையும் பொறுத்ததே.

நான் முதல் முறையாக 1959இல் சிங்கப்பூர் ,மலேசியா நாடுகளுக்கு விஜயம் செய்து ஆறு மாதங்கள் கழித்தே திரும்பினேன். அதன் காரணம் அந் நாடுகளிலிருந்து என்னைப் பார்க்க வரும் பெரிய வியாபாரிகளும் கடை சிப்பந்திகளும்கூட குடும்பத்தைப் பிரிந்தே வாழ்பவர்கள். பல இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறைதான் இந்தியாவுக்கு வந்து மனைவி மக்களுடன் ஏதோ ஒரு மாதம் இருந்துவிட்டு மலேசியா, சிங்கப்பூர் திரும்பிவிடுவார்கள்.

முஸ்லிம் சகோதரர்கள் பலர் 7 அல்லது 8 வருடங்கள் கூட குடும்பத்தைப் பிரிந்தே வாழ்ந்து வந்தனர் . ஒரு முறை வந்து போகும் செலவின் பாதிப்பு இரண்டு வருடங்களுக்கு அவர்களை வாட்டும். இவர்கள் எல்லோருமே பிறந்த திகதியோ, கூட்டு எண்ணோ 7 ஆக உள்ளவர்கள்தான். இந்தக் கஷ்டத்தை நாங்கள் நேரில் வந்து உங்கள் மூலம் தீர்த்துக் கொண்டோம்.

ஆனால் வசதி குறைவான ஏராளமானவர்கள் நேரில் வந்து உங்களை சந்திக்கமுடியாது. ஆதலால் உங்கள் வாழ்நாளில் சில மாதங்களை அவர்களுக்காக ஒதுக்கி ஒரு முறை அங்கு வரலாகாதா என்று கேட்ட வண்ணமிருந்தனர். அங்கு சென்ற தினமே எனக்காக மிகப் பெரிய வரவேற்பளித்த தமிழ் முரசு பத்திரிகையின் முதலாளி ஆசிரியராகத் திகழ்ந்த ஸ்ரீமான் சாரங்கபாணி, மாலையில் ஒரு சொற்பொழிவு ஏற்பாடு செய்து, வருபவர்கள் பிறந்த திகதியைக் குறித்துக்கொண்டு வரவேண்டுமென பெரிதாக பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். அவர் முன்னுரையில் என்னைப்பற்றி சிலாகித்து இந்த ஆசிரியர் மற்றவர்கள் போல் பணம் சம்பாதிப்பதற்காக இங்கு வரவில்லை. மனைவி மக்களைப் பிரிந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களது வாழ்க்கையை வளம்பெறச் செய்யவே வந்துள்ளார் எனக் கூறினார் .இதற்கெல்லாம் காரணம் 7 எண்தான் என்று கூறி கூட்டத்தில் எத்தனை பேர் 7 எண் இல்லாத வராவார்கள் என்று கேட்டேன் . ஒருவரும் கைதூக்கவில்லை. எல்லோருமே திகதி குறித்து வந்திருப்பதாகக் கூறினர். ஸ்ரீமான் சாரங்கபாணி தானும் சிறுவயதில் திருவாரூரில் இருந்து வந்ததாகவும் இன்னும் ஒரு முறை கூட இந்தியா திரும்பவில்லை என்றார்.

அநேகர் பத்துவருடங்கள், இருபது வருடங்களாயின மனைவி, மக்களை பிரிந்து என்றனர். விவாகம் முடிந்து நான்கு நாட்கள் கூட இல்லாமல் இங்கு வந்து ஏழு வருஷங்களாகின்றன என்பது போன்ற சோகக் கதைகள் எத்தனையோ, அம்முறை நான் பெயர் மாற்றம் செய்த எல்லா அன்பர்களும் செல்வப்பெருக்குடனும், மனைவி மக்களுடன் சேர்ந்தே நன்கு வாழ்கின்றனர். (மலேசியா நாட்டில் எல்லோரும் இந்தக் கலையை உணர மிக்க பிரக்கியாதி கொடுத்த 'தமிழ் நேசன்' பத்திரிகைக்கும் தமிழ் முரசு எக்கோ பத்திரிகைகளுக்கும் என் நன்றி)

அன்று கடைகளில் சிப்பந்திகளாக இருந்த அநேகர் இன்று சீமான்களாக வாழ்கின்றனர். அச்சமயம் ஜப்பானில் இருந்து நைலக்ஸ் சேலைகள் இறக்குமதி செய்து விற்ற குஜராத்தி வியாபாரி - நான் விஜயம் செய்த அடையாளமாக தனக்கு ஏதாவது பெரிதாக செய்ய வேண்டும் என்றார். அதற்கிணங்கி அவர் வரவழைத்து விற்கும் துணிகளுக்கு நைலக்கஸ் க்ரேப் 644 எனப் போடச் சொன்னேன். பெண்மணிகளுக்கு தெரியும் இந்த 644. இதுவே நான் முதலாக நம்பரை துணி வியாபாரத்தில் புகுத்தியது. அவரும் பலகோடி டாலர்களை இதன்மூலம் அடைந்தார்.

தென்னிலங்கையில் இருந்து ஜப்பான் வரை துணி வியாபாரத்தில் சிறந்து விளங்கும் விலாசங்கள் எல்லாம் நான் பெயர் அமைத்துக்கொடுத்தவைதான் என்பது வியாபார வட்டாரங்களில் யாவரும் அறிந்ததே. தோல்வியே அறியாமல் மக்களுக்கு பெருத்த நன்மைகளையே இக்கலை கடந்த 41 வருஷங்களாக அளித்து வந்திருக்கிறது என்பதே எல்லோரும் அறிந்து தைரியத்துடன் , சிறிதும் தயங்காமல் பின்பற்றலாம் என்பதை உணர்த்தவே இவ்வளவு எழுதுவது . பல ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்யும் ஸ்தாபனங்களிலும் , இதைப் பின்பற்றுவதால் வேலை நிறுத்தம் , விபத்து இவைகள் இதுகாறும் நிகழ்ந்ததில்லை என்பதை வாசகர்கள் அறிவர்.

**பண்டிட் ஸேதுராமன்**

என்னிடம் வருபவர்களை தராதரம் தெரியாமல் நான் வேகமாகப் பணக்காரன் ஆக்குகிறேன் என்பது பல பெரிய மனிதர்கள் என்னைப் பற்றி கூறும் குற்றச்சாட்டு. நான் 20ஆம் வயதில் இராணுவத்தில் வகித்த பெரிய பதவியை விட்டு விட்டு இந்த சாஸ்திரத்தை ஜனங்களுக்கு நன்மை செய்ய உபயோகிக்க வேண்டும் என்று தொழிலாக ஏற்றுக்கொண்டேன்.

இந்த சாஸ்திரம் வேகமாகப் பரவவேண்டுமானால், நான் பெயர் மாற்றி அமைப்பவர்கள் வெகு சீக்கிரம் மேலான பலன்களை அடைந்தால்தான் உலகம் ஒப்புக்கொள்ளும் என்கிற வேகத்தில் எல்லோரையும் பெரிய பதவிகளை அடையும் படி மாற்றி வைத்தேன்.

(தொடரும்)

# சந்திரிகாவுக்கு இந்தியாவின் பாதுகாப்பு பெறப்படும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

"இலங்கை முன்னாள் அதிபர் சந்திரிகாவுக்கு, போதுமான பாதுகாப்பு வசதிகள் அளிக்கப்படாவிட்டால், இந்தியாவிடம் இருந்து அவரது குடும்பத்துக்கு பாதுகாப்பு கேட்டுப் பெறுவோம்" என்று அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

முன்னாள் அதிபர் என்பதற்காக சந்திரிகாவுக்கு அபரிமிதமான பாதுகாப்பு அளிப்பது தேவையற்றது என்று இலங்கை சுப்ரீம் கோர்ட் கருத்துத் தெரிவித்திருந்தது. இதையடுத்து சந்திரிகா மற்றும் அவரது குடும்பத்தாருக்கு அளித்துவரும் பாது காப்பை இலங்கை அரசு பெரிதும் குறைத் துள்ளது. தற்போது, சந்திரிகா தனது மகளின் திருமணத்துக்காக லண்டன் சென்றுள்ளார். அவர் இலங்கை திரும்பும் போது முன்பு அளிக்கப்பட்ட பலத்த பாதுகாப்பு அளிக்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து இலங்கை தேசிய பாரம்பரியத்துறை அமைச்சரும், இலங்கை முன்னாள் அதிபர் சந்திரிகாவின் சகோதரருமான அனுரா பண்டார நாயக்க கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது,

இலங்கை முன்னாள் அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு இப்போதும் கூட உயிருக்கு கடும் அச்சுறுத்தல் உள்ளது. 1999ஆம் ஆண்டில், புலிகளின் தற்கொலைப் படை மனித வெடிகுண்டு தாக்குதலில், ஒரு கண்ணின் பார்வையை இழந்தார் சந்திரிகா. சிறிது தவறியிருந்தாலும், அவர் சாகடிக்கப்பட்டிருப்பார்.



அவர் சாவில் இருந்து மீண்டுள்ளார். தற்போது அவர், அரசியல் பதவி வகிக்கா விட்டாலும் கூட, விடுதலைப்புலிகளால் அவரது உயிருக்கு கடும் அச்சுறுத்தல் நீடிக்கிறது. அவருக்கு பலத்த பாதுகாப்பு அவசியம். அதைப் பெறுவதற்கும் அவருக்கு உரிமை உள்ளது. அதை மறுக்கமுடியாது.

உள்நாட்டு போ...ருக்கு வீரர்கள் தேவைப்படுகின்றனர் என்...றா அல்லது இராணு வத்தின் செயல்பாடுக...ள சுட்டிக்காட்டியோ சந்திரிகா குடும்பத்துக்கு ப...ாதுகாப்பை குறைத் துக் கொள்வதை ஏற்றுக் ...கொள்ள முடியாது. முன்னாள் அதிபர் சந்திரிக...ாவுக்கு, இப் போதைய அதிபர் போதுமான ப...ாதுகாப்பு அளிக்க முடியாத நிலை ஏற்பட்டா...ல், நாங்கள் இந்தியாவிடம் இருந்துபாதுகாப்...பு கேட்டுப்பெறுவோம்.

தற்போது சந்திரிகா...வுக்கு பெரிதும் பாதுகாப்பு குறைக்கப்பட்டு...ள்ளது. எனவே, தற்போது தனது மகள் திரும...ணத்துக்காக லண்டன் சென்றுள்ள சந்திரிக...ாவை ,அவரது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படு...ம் வரை நாடு திரும்ப வேண்டாம் என்று நாங்க...ள் அறிவுறுத்தி உள்ளோம். இவ்வாறு அனுரா ... பண்டார நாயக்க கூறினார். ஆனால்,அனுரா...வின் கருத்தை "சிறுபிள்ள...ைத்தனமானது" என்றும், "பொருளற்றது" எ...ன்றும் அதிபர் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

(அ)

# மரணமான தம்பி உயிர்த்தெழுவதற்காக 2 மாதம் ஜெபம் செய்த மதபோதகர்

இரண்டு மாதங்களுக்கு முன்னர் தற்கொலை செய்த தனது தம்பியின் சடலத்தை வைத்து மதபோதகரின் குடும்பம் அவர் உயிர்த் தெழ பிரார்த்தனை செய்துள்ளது.

கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

மதபோதகரான சார்லஸ்(44) கோவை பாப்ப நாயக்கன் பாளையத்தில் மனைவி சாந்தி (41) மூன்று மகள்மார் மற்றும் ஒரு மகனுடன் வசித்து வருகிறார். இவரது தம்பி செல்வ குமார் (வயது 37) கடந்த ஓராண்டு காலமாக உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இது குறித்து அறிந்த சார்லஸ் துவரக் குறிச்சிக்கு சென்று தம்பியை அழைத்து வந்து தன்னுடன் தங்க வைத்துக்கொண்டார்.

அதிக நாட்கள் ஆகியும் கணவர் வீட்டுக்கு வராததால் சந்தேகம் அடைந்த செல்வகுமாரின் மனைவி அனுராதா கோவையில் உள்ள சார்லஸ் வீட்டுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார் .தொலைபேசியில் பேசும் சார்லஸ் தம்பிக்கு உடல் நலம் இல்லை என்றும் தம்பி வெளியூர் சென்றிருக்கிறார் வந்துவிடுவார் என்றும் தெரிவித்துள்ளார்.

சந்தேகம் அடைந்த அனுராதாவும் அவரது சகோதரர்களும் கோவை வந்தனர். ஆனால் சார்லஸ் வீடு பூட்டியிருப்பது கண்டு ஏமாற்றம் அடைந்தனர். இரண்டு முறை வந்தும் வீடு பூட்டியிருந்ததால் சந்தேகம் அடைந்த அனுராதா இது தொடர்பாக, பொலிஸாரிடம் புகார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை பொலிஸாரின் உதவியுடன் வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டது அப்போது உள் பக்கம் கதவு தாழிடப்பட்டிருந்தது.

வேறு வழியின்றி கதவை உடைத்து போது உள்ளே எலும்புக்கூடாக தரையில் கிடத்தியிருந்த செல்வகுமாரின் சடலத்தைச் சுற்றி சார்லஸ் அவரது மனைவி மற்றும் நான்கு குழந்தைகளும் ஜெபம் செய்து கொண்டிருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

சடலத்தை கைப்பற்றிய பொலிஸார், சார்லஸிடம் விசாரித்த போது, திடுக்கிடும் தகவல் வெளியானது. செல்வ குமார் மே 6ஆம் திகதி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.இதைப் பார்த்த சார்லஸ் மற்றும் நண்பர் ராஜேஷ் ஆகியோர் தூக் கில் தொங்கிய சடலத்தை இறக்கி வைத்து 'உயிர்த்தெழுந்து விடுவார்' என ஜெபம் செய்ய தொடங்கியுள்ளனர். சடலம் அழுகிய வாடை வீசும் போது ஏதோ மூலிகையைக் கொண்டு தடவியுள்ளனர்.

இதனால் வெளியே பிணவாடை வீசுவது குறைந்துள்ளது. இப்போதும் சார்லஸின் குழந்தைகள் 'சித்தப்பா உயிருடன் திரும்பி வருவார்' என்றே சொல்கின்றனர் .பெரும் பரபரப்பு ஏற்படுத் தியுள்ள இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5)

## இன்று ஒரு தகவல்

# அணுகுமுறை

ஒரு பெரியவர் உட்கார்ந்திருக்கிறார். அவரைச் சுற்றி அவருடைய தோழர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்.

ஏதோ ஒரு முக்கியமான செய்தியை அவர் அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர்களும் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்திலே யாரோ ஓர் ஆள் வேகமாக அங்கே வருகிறார்.

வருகிற வேகத்திலேயே... "எனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள்..." என்று கேட்டுக் கொண்டே வருகிறார். கேட்பது உதவி... ஆனால் குரல் மிரட்டுகிற மாதிரி இருக்கிறது... அதட்டுகிற மாதிரி இருக்கிறது.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் ஆத்திரப்படவில்லை. ஆனால் அவரைச் சுற்றி இருந்தவர்கள் ஆத்திரப்பட்டார்கள்.

இதைப் பெரியவர் கவனித்தார். கொஞ்சம் அமைதியாக இருங்கள் என்றார்... வந்தவரைக் கூப்பிட்டார். அவருக்கு சில பொருட்களைக் கொடுத்தார்.

"என்ன... இப்பொழுது உங்களுக்கு மகிழ்ச்சி தானே" என்றார்.

"ம்...ம்...!" என்றார் அலட்சியமாக அவர்.

"நான் உங்களை நல்லமுறையில் நடத்தி னேனா?..." என்றார் பெரியவர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை..." என்றார் அவர். குரலிலே கடுமை குறையவில்லை.

சுற்றி இருந்தவர்களாலே இதைப் பொறுக்க முடியவில்லை... கோபத்துடன் வந்தவரை நெருங்க ஆரம்பித்தார்கள். பெரியவர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்.

வந்தவரை "வாருங்கள் என்னோடு" என்று சொல்லி வீட்டுக்கு அழைத்துப் போனார். அங்கே போனதும் மேலும் சில பொருட்களை எடுத்து அவரிடம் கொடுத் தார்.

"இப்ப திருப்திதானே" என்று கேட்டார் பெரியவர்.

வந்தவருடைய முகம் அப்பொழுது தான் மலர்ந்தது. "ரொம்ப நன்றி... இறைவன் உங்கள் குடும்பத்துக்கு எல்லா நன்மைகளையும் செய்வார்" என்று சொன்னார். "இதே வார்த்தைகளை என்னுடைய தோழர்களிடமும் வந்து சொன்னால் அவர்கள் கோபம் தணிந்து விடும்... வர முடியுமா ?" என்று கேட்டார்.

கண்டிப்பாக வருகிறேன் என்றார். மறுநாட் காலையிலே அந்த இடத்துக்கு வந்தார். அதே மாதிரிச் சொன்னார். தோழர்கள் வியப்போடு பெரியவரைப் பார்த்தார்கள். அந்தப் பெரியவர்தான் நபிகள் நாயகம்! அவர் சொன்னார்.

ஒருவன் மிகவும் ஆசையுடன் ஒரு ஒட்டகத்தை வளர்த்து வந்தான். ஒருநாள் அந்த ஒட்டகம் கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிப்போய் விட்டது.

அக்கம் பக்கத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் அந்த ஒட்டகத்தைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தார் கள். அதைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள்.

ஒட்டகம் தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. இந்தச் சமயத்திலே அந்த ஒட்டகத்தை வளர்த்தவன் அங்கே ஓடி வந்தான்.

"நீங்கள் அதை ஒன்றும் செய்ய வேண்டாம் விட்டு விடுங்கள். அதனுடைய சுபாவம் எனக்கு நன்றாகத் தெரியும்... அதைச் சுலபமாக என்னுடைய வழிக்குக் கொண்டு வரமுடியும்... நான் பார்த்துக் கொள்கி றேன்... விட்டு விடுங்கள்..." என்றான்.

எல்லோரும் விலகிப் போனார்கள். இவன் என்ன செய்தான் தெரியுமா? கொஞ்சம் புல்லை எடுத்துக் கொண்டு ஒட்டகத்தை நெருங்கினான். அவ்வளவு தான்... அது ஓடிவந்து அவன் காலடியிலே உட்கார்ந்து கொண் டது. செல்லமாக அதைத் தடவிக் கொடுத்தான். அதன் முதுகிலே ஏறி உட்கார்ந்து கொண்டான். அது பாட்டுக்குச் சாதுவாக நடந்து போனது.

இந்தக் கதையை நபிகள் நாயகம் தம்முடைய தோழர்களுக்கு சொன்னார். "ஒட்டகத்தை மட்டு மல்ல சில மனிதர்களையும் கூட சில விதத்திலே அணு கித்தான் அவர்களைச் சீர்திருத்த வேண்டியிருக் கிறது" என்றார்.

இது ஓர் அழகான உளவியல் அணுகுமுறை. சில குடும்பத் தலைவர்கள் கூட இந்த ஒட்டகம் மாதிரி நடப்பது உண்டு. அப்புறம் அடங்கிப் போவதும் உண்டு.

ஒரு குடும்பத் தலைவர் காலையிலே எழுந்ததி லிருந்து சத்தம் போட்டுக் கத்திக்கொண்டிருந்தார். பக்கத்திலே இருந்தவர்களெல்லாம் ஓடிப்போய் சமா தானம் செய்து பார்த்தார்கள்... அவர் ஓய்கிற மாதிரி தெரியவில்லை. கடைசியில் அவர் மனைவி வந்தாள்...

"நீங்கள் எல்லோரும் விலகிப் போங்கள்... அவர் சுபாவம் எனக்குத் தெரியும். நான் பார்த்துக்கொள்கி றேன்" என்றாள். சரியென்று எல்லோரும் போய்விட் டார்கள். சாயந்தரம் வந்து பார்த்தால் அவர் சத்தமேயில் லாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். எல்லோருக் கும் ஆச்சரியமாக இருந்தது.

என்னம்மா செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை...ஒரு வேளை சாப்பாட்டை நிறுத்தி னேன்... பட்டினி போட்டேன். அவ்வளவுதான்..." என்றாள் அவர் மனைவி!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மணல் விநியோக நடைமுறை யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ்.மாவட்டத்தில் அரச மற்றும் சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவியுடன் மாவட்ட செயலக,பிரதேச செயலக மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானத் திட்டங்களுக்கு மாவட்ட செயலகத்தினால் மணல் பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

ஏனைய கட்டுமானப் பணிகளுக்கான மணலும் கூடிய விரைவில் விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

வீடமைப்புத் திட்டங்களின் கீழ் பயன் பெறுபவர்களும் சுனாமி மீள் கட்டுமானப் பணிகளின் பயன் பெறுபவர்களுக்கும் மற்றும் அரசாங்கத்தின் நிதியுதவி பெற்ற கட்டுமானத் திட்டங்களுக்கும் வழங்கப்பட்டு வரும் மணல் அனுமதி தொடர்பில் பின்வரும் நடைமுறைகள் கையாளப்படுகின்றன.

வீட்டுத் திட்டங்களின் தொடர்பில் பயனாளிகள் தேவையான மணலுக்கான விண்ணப்பத்தை கிராம சேவையாளர் மூலமாக பிரதேச செயலரிடம் அனுமதி பெற்று மாவட்ட செயலக மணல் விநியோக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடம் கையளித்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன்போது ஒரு உழவு இயந்திரப்பெட்டிச் சுமைக்கு ரூபா ஆயிரத்து 300 அறவிடப்படுவதுடன் அனுமதிப்பத்திரத்திற்கு ரூபா 100 மாக மொத்தம் ரூபா ஆயிரத்து 400 அறவிடப்படும் தவிர அரச திட்ட நிதியுடன் மற்றும் தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கட்டுமானத்திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்கள் உரிய நிதியுதவியினைச் செய்யும் அமைப்பின் திட்ட பணிப்பாளரிடம் உறுதிப்படுத்தி குறிப்பிட்ட திட்டம் இடம் பெறும் பிரதேச செயலர் பிரிவு ,பிரதேச செயலரின் சிபார்சின் மூலம் மாவட்ட செயலகத்தில் பெற்று மணல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

இவற்றின்போது ஒரு உழவு இயந்திரச் சுமை மணலுக்கு ரூபா ஆயிரத்து 300-ம் அதற்கான அனுமதிப்பத்திரத்திற்கு ரூபா 100-ம் ஆக மொத்தம் ரூபா ஆயிரத்து 400 ஒரு உழவு இயந்திர சுமைக்கு செலுத்தவேண்டும். ஒரு அனுமதிப்பத்திரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உழவு இயந்திர சுமைகளுக்கு அனுமதி வழங்க முடியும்.

ஒரு உழவு இயந்திரச்சுமை 3/4 கியூப் என்பதாலும் ஒரு லொறி லோட்டில் 2 1/4 கியூப் மணல் ஏற்றமுடியும் என்பதாலும் ஒரு லொறி லோட் மணலுக்கு ரூபா 3 ஆயிரத்து 900மும் அனுமதிப்பத்திரத்திற்கு ரூபா நூறும் ஆக ரூபா 4 ஆயிரம் செலுத்தப்படவேண்டும்.

தற்சமயம் மணல் குடத்தனையிலிருந்து உரிய இடங்களுக்கு எடுத்துச்செல்வதற்கு மாவட்ட செயலகமும் யாழ். மாவட்ட தனியார் பார ஊர்திகள் சங்கத்தினரும் இணைந்து பின்வருமாறு ஒரு லொறி லோட் மணலுக்கான போக்குவரத்துச் செலவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதல் 10 கி.மீற்றர் தூரத்திற்கான மணல் போக்குவரத்துச் செலவு பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது. இது கனரக வாகனங்களுக்கும் பொருந்தக்கூடியது.

சாரதி சம்பளம் : ரூபா 750,கிளினர் சம்பளம் ரூபா 500, டீசல் மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 2000,மொத்தம் 3 ஆயிரத்து 250 (10 கி.மீ.தூரம் சென்று வருவதற்கு),மணல் ஏற்றி இறக்கல் கூலி ரூபா 1250.

மேலும் 10 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் சுமையுடனான கூலி ரூபா 30,சுமையில்லாமல் கூலி ரூபா 20 எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஊர்காவற்றுறையிலிருந்து புறப்படும் லொறி குடத்தனையைச் சென்றடைய 66 கிலோமீற்றர் தூரம் எனின் சுமையில்லாமல் குடத்தனைக்குச் செல்வதற்கு முதல் பத்து கிலோமீற்றர் தவிர்ந்த 56 கிலோ மீற்றருக்கு 56x20= 1120-ம் மணல் சுமையுடன் மீண்டும் ஊர்காவற்றுறையை அடைய 56x30 = 1680மாக மொத்தம் 4500 + 1120 + 1680= 7300 ஐ வழங்க வேண்டியிருக்கும்.

மேலும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிற்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குமென அனுமதி பெற்ற பார ஊர்திகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து பொருத்தமான பார ஊர்தியைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் உரிய பணத்தைப் பெற்றுக்கொண்டதும் அதற்கான பற்றுச்சீட்டினை வழங்கவேண்டியது லொறி உரிமையாளரின் கடமையாகும்.

ஒவ்வொரு லொறிக்கும் இயலக்கூடிய அளவு சமமான அளவில் மணல் ஏற்றி இறக்குவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். இதற்கமைய ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து லொறி உரிமையாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். குறிப்பிட்ட அளவுக்கு மேல் லொறிக்கூலி அறவிடும் லொறிகளுக்கான அனுமதி எதுவித அறிவித்தலுமின்றி ரத்துச்செய்யப்படும்.

மேற்படி நடைமுறை தொடர்பில் ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் மாவட்ட செயலகத்திற்கு எழுத்துமூலமான முறைப்பாடு செய்ய முடியும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார். (ந)

## இராசிபலன்

10.06.2007
வைகாசி 27 ஞாயிற்றுக்கிழமை
தசமி மூன்னிரவு 2.48 வரை
உத்தரட்டாதி காலை 6.19 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.42 வரை
இராகுகாலம் 04.22–05.52 மணிவரை
சுபநேரம் 8.52–10.22 மணிவரை
அமிர்த சித்தம்

**மேடம்:-** அமைதிக்குறைவு, பணவிரயம், பிறருக்கு உதவுதல், கடின வார்த்தை.

**இடபம்:-** தெய்வசிந்தை, குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை, விருந்துபசாரம்.

**மிதுனம்:-** உற்சாகமான நிலை, தொழில் சிந்தை, பிறர் உதவி, அதிகாரம்.

**கடகம்:-** பெரியோர் உதவி, எதிர்பாராத செலவு, தேவையற்ற பயம், முயற்சி தாமதம்.

**சிங்கம்:-** வாகனம் பயம், வீண் பகை, காரிய தடங்கல், புதிய திருப்பம்.

**கன்னி:-** கலந்துரையாடல், ஆரோக்கியம், குடும்ப சுகம், பிரயாண நன்மை.

**துலாம்:-** சத்துருஜெயம், பெருமையடைதல், தொழில் சிந்தை, உடல் நலம்.

**விருச்சிகம்:-** தன்னம்பிக்கைக்குறைவு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், சொத்துக்களால் கவலை, பணக்குறைவு.

**தனுசு:-** புதிய சிந்தை, சுப செலவு, பதட்டமான நிலை, காரியதாமதம்.

**மகரம்:-** சகோதரர் உதவி, பிரயாண நன்மை, காரிய ஜெயம், சுவாரசியம்.

**கும்பம்:-** மனக்குழப்பம், வேலைச்சுமை, முயற்சி தாமதம், இனசனை தர்க்கம்.

**மீனம்:-** சமயோசிதமான சிந்தனை, போசன சுகம், தேகநலன், தொழில் விருத்தி.

-வளவன்

## தடகள விழா - 2007

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் தடகள விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் மு. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (அ)

## கொடிவாரம்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவு கலாசாரப் பேரவையின் 6ஆம் ஆண்டு நிறைவையொட்டி பேரவைக்கென நிரந்தர நிதியம் உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச கலை, கலாசார விழுமியங்களின் அபிவிருத்திக்கும் , கலைஞர்களின் எதிர்கால மேம்பாட்டிற்கும், பாரம்பரிய கலை இலக்கிய வளர்ச்சிக்குமாக ஏற்படுத்தப்பட்ட இந் நிதியத்திற்காக யூன் மாதம் 11முதல் 15 வரை கொடிவாரம் பிரதேச கலாசாரப் பேரவையினால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (அ)

## வன்னியில் விமானத்தாக்குதல் பாடசாலைகள் மூடப்பட்டன

இலங்கை விமானப்படையின் மிக் ரக மற்றும் கிபிர் ரக வானூர்திகள் வன்னிப்பகுதியில் குண்டுத் தாக்குதலை நடத்தியமையால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

அது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது ,

வன்னி வான்பரப்புக்குள் கடந்த வெள்ளிக்கிழமை காலை 7.45 மணியளவில் நுழைந்த இலங்கை விமா னப்படையின் மிக் மற்றும் கிபிர் விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டு குண்டுகளை வீசிச் சென்றன.

விமானப்படையின் வேவு விமானமும் தொடர்ச்சியான பறப்பை மேற்கொண்டிருந்தது. காலையில் நடத்தப்பட்ட இத் தாக்குதலையடுத்து பாடசாலைகளுக்கான மாணவர்கள் வரவு குறைந்தது.

மீண்டும் நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் வானூர்திகள் தாக்குதலை நடத்தியுள்ளன.

இத் தாக்குதலையடுத்து பாடசாலைக்குச் சென்ற குறைந் தளவு மாணவர்களும் பெரிதும் பதற்றமடைந்தனர். இத னையடுத்து உடனடியாகவே பாடசாலைகள் மூடப்பட்டன. (அ-5)

துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே.
-அல்பேனியா

வலம்புரி

## உத்தரவை நிறைவேற்றிய பொலிஸ் மாஅதிபர் பாவம்

கொழும்பில் தங்கியுள்ள வடக்குக் கிழக்கு தமிழர்களை வெளியேற்றுவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை வேளையில் கொழும்பிலிலுள்ள விடுதிகளைச் சுற்றிவளைத்த பொலிஸார் அங்கிருந்த வடக்குக் கிழக்குத் தமிழர்களை பஸ் வண்டிகளில் ஏற்றி வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இறக்கி விட்டனர்.

பல்வேறு தேவை கருதி தலைநகருக்குச் சென்ற தமிழ் மக்களை இவ்விதம் பஸ் வண்டிகளில் ஏற்றி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இறக்கி விட்ட செயலை, பல தரப்பினரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

குறிப்பாக, சர்வதேச சமூகத்தின் கண்டனத்தின் வேகம் அரசினால் எதிர்பார்க்கப்படாத ஒன்றாகும். அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகள் தமிழர்கள் வெளியேற்றப்பட்ட செயலை வன்மையாகக் கண்டித்ததுடன் இது இனவன்மத்தின் வெளிப்பாடு எனவும் விமர்சித்தன.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் காட்டிய ஆவேஷம் மிக உச்சமாகவிருந்தது. இதனிடையே தமிழர்களை வெளியேற்றுவதற்கான தடை உத்தரவைக் கோரும் மனுவை விசாரித்த நீதிபதிகள் கொழும்பிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றுவதை உடனடியாக நிறுத்துமாறு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தனர்.

இவ்விதம் கொழும்பிலிருந்து அதிகாலை வேளையில் பஸ்களில் ஏற்றியனுப்பிய சம்பவத்திற்கான எதிர்ப்பு அரசின் எதிர்பார்ப்பைக் கடந்து வேகமெடுத்ததனால் நிலைமையை உடனடியாகச் சீராக்கம்செய்ய வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விட்டோம் என்பதை இலங்கை அரசு உணர்ந்து கொள்வதற்காக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பாராளுமன்ற விவாதங்கள், நீதிமன்றத் தீர்ப்பு எனபல்வகைக் காரியங்கள் செய்ய வேண்டியதாக இருந்தது.

அதேநேரம் தமிழர்களை வெளியேற்றிய சம்பவத்தை அரசோடு இணைந்திருந்த ஜே.வி.பியும் கண்டித்தமை அரசுக்கு 'சீ' என்றாகிவிட்டது.

தமிழர்களைத் தாக்கி எறிய வேண்டுமெனக் கோஷம் போடும் ஜே.வி.பிக்கு இருந்த அரசியல் அறிவுகூட நமக்கு இல்லாமல் போயிற்றே என அரச தரப்பினர் நிச்சயம் கவலை கொண்டிருப்பர்.

இவ்வாறு முன்யோசனையின்றி விடுதிகளிலிருந்த தமிழ் மக்களை வெளியேற்றிய சம்பவம் தமக்குத் தீராத இடும்பை தரும் எனக் கருதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமிழர்களை வெளியேற்றியமை தொடர்பில் தனக்கு எதுவுமே தெரியாததுபோல் காட்டிக் கொண்டார்.

உண்மையில் குறித்த சம்பவம் தனக்குத் தெரியாதென்பதை நிரூபிப்பதற்காக தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளார்.

பாவம் பொலிஸ் மா அதிபர். உத்தரவை மேற்கொண்டு காரியத்தை சமைத்து முடித்தார். சமையல் கருகிவிட்டதால் சமைக்க உத்தரவிட்டவரே சமையல்காரரிடம் விளக்கம் கேட்கிறார். அதுகூட ஒரு வகையான மகிழ்வுதான். ஏனெனில் சில விளக்கங்கள் எதிர்காலப் பதவி உயர்வுகளுக்கு உதவும் அல்லவா?

# ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் அமைதியான சூழ்நிலை சாத்தியமற்றது

## பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் 'தி எக்கொனமிஸ்ற்' தகவல்

(லண்டன்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அமைதி என்பது சாத்தியமற்றது என்று பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் 'தி எக்கொனமிஸ்ற்' என்ற இதழ் கருத்துத் தெரிவித்துள்ளது.

அந்த இதழில் இலங்கை நிலைமைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட கட்டுரையின் முக்கிய பகுதிகள் வருமாறு,

கடந்த வருடம் உக்கிரமடைந்துள்ள மோதல்களில் ஆப்கானிஸ்தானை விட அதிகளவான மக்கள் இலங்கையில் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 18 மாதங்களில் 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அதற்கு முன்னைய மூன்று வருடங்களில் கொல்லப்பட்டவர்கள் 200 இலும் குறைவானவர்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயங்கரவாத வழிகளைப் பயன்படுத்தி வருகின்றார். யாழ்.மாவட்டத்தில் மட்டும் 300 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வடக்கில் விடுதலைப்புலிகளிடம் நிழல் அரசு உண்டு. அதில் காவல் துறை, நீதித் துறை, வரித் திணைக்களம் என்பன உண்டு.

அவர்களின் பிரதேசங்கள் நன்கு பலப்படுத்தப்பட்ட அரண்களைக் கொண்டவை. அதனைக் கைப்பற்ற இராணுவம் பல தடவைகள் முயன்று தோல்வி கண்டுள்ளது. அவர்களின் பிரதேசங்களுக்குள் ஊடுருவுவது சாத்தியமற்றது. விடுதலைப்புலிகளின் பகுதிகள் மீது ஓமந்தைக்கு அருகாக இராணுவத்தினரால் ஆறுக்கும் மேற்பட்டதாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இதனை அரசு மறுத்த போதும் கண்காணிப்புக் குழு உறுதி செய்துள்ளது. இந்த ஒவ்வொரு தாக்குதல் முயற்சிகளிலும் 200ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டுள்ளனர்.

சுய பயிற்சி பெற்ற 10 ஆயிரம் விடுதலைப்புலிகள் 2 இலட்சத்து 50 ஆயிரம் படையினருடன் மரபு வழிச்சமரில் ஈடுபட்டு வருகின்றனர். விடுதலைப்புலிகளின் மிகப் பிந்திய ஆயுதம் 10 இலகு ரக வானூர்திகளாகும். அவற்றைக் கொண்டு விடுதலைப்புலிகள் தலைநகர் கொழும்பின் மீது இரு முறை தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் இலகு ரக வானூர்திகளை எதிர்கொள்ள அரசு மிக்-29 ரக வானூர்திகளைக் கொள்வனவு செய்துள்ளது. ஆனால் பிரித்தானியாவின் இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட ஸ்பிற்பையர் இதற்குப் போதும் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசில் அங்கம் வகிக்கும் புத்த மதத் துறவிகளைக் கொண்ட கட்சியான ஹெலஉறுமய போர் நிறுத்தம் நாட்டைப் பிரிவடையச் செய்யும் எனக் கூறி வருகின்றது. இலங்கையானது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் எனவும் கூறுகின்றது.

அரசு நிர்வாகத்தில் மூன்று முக்கியஅமைச்சுக்களை நிர்வகிப்பதற்கு மகிந்த தனது மூன்று சகோதரர்களை நியமித்துள்ளார். மேலும் நிதி, பாதுகாப்பு, பொது வேலைத் திட்டம் போன்றவற்றை அவர் தன்னகத்தே கொண்டுள்ளார். இலங்கையின் வரவு- செலவுத் திட்டத்தில் 70 வீதத்தை மகிந்த சகோதரர்கள் கொண்டுள்ளனர்.

பாதுகாப்புச் செலவு இந்த ஆண்டு 40 வீதத்தால் அதிகரித்துள்ளது. அது தேர்தலில் தெரிவு செய்யப்படாத கோத்தபாய ராஜபக்ஷவின் பொறுப்பில் உள்ளது. முன்னாள் இராணுவ அதிகாரியான அவர், 17 வருடங்கள் அமெரிக்காவில் வாழ்ந்தவர். ஒரு சமயத்தில் அங்கு 7-11 வர்த்தக நிலையங்களை நிர்வகித்து வந்திருந்தார்.

அரசின் தவறான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. மத்திய வங்கி அதிகளவு புதிய பணத்தை அச்சிட்டுள்ளது. அது பணவீக்கத்தை 15 வீதமாக அதிகரித்துள்ளது. விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலை தொடர்ந்து உல்லாசப் பயணத்துறை பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இது பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.

அமைதி முயற்சியை மகிந்த தோற்றுவிக்க வேண்டுமானால் தமது கூட்டணியிலுள்ள தேசிய வாதக் கட்சிகளை விடுத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு கூட்டணியை ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமெனில் அது மகிந்தவின் கீழ் உருவாக்க முடியாது.

உடனடியான அமைதி முயற்சிகளுக்குத் தற்போது சாத்தியமில்லை. ஏனெனில் 2010 ஆம் ஆண்டு வரை பொதுத் தேர்தல் நடைபெறப் போவதில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# உலகத் தொழிலாளர் மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த உரையாற்றுவார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுவிஸ்லாந்தின் தன [illegible]நகரமான ஜெனீவாவில் நடைபெறவுள்ள 93-வது ச[illegible]வதேச தொழிலாளர் வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு விசேட உரையாற்றவுள்ளார்.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் இந்த மாநாடு எதிர்வரும் 11 ஆம்திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. உலக நாடுகளின் தொழில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் இம் மாநாட்டில் முதல்நாள் நிகழ்வில் நாடுகளின் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கான யோசனைகள் அங்கத்தவர்களால் முன்வைக்கப்படும்.

2 ஆம் நிகழ்வில் போது அணிசேரா நாடுகளின் அமைச்சர்களுக்கிடையிலான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும். [illegible]றாவது நிகழ்வின்போது இம் மாநாட்டில்கலந்து கொள்[illegible] சார்க் நாடுகளின் தொழில் அமைச்சர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். தொழில் அமைச்சர் அதாவுட செனவிரட்ண இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு நேற்று முன்தினம் ஜெனீவா ப[illegible]ணமானார்.

அமைச்சர் செனவிரட்ண கடந்த வருடம் உலகத் தொழிலாளர் சம்மேளனத்தின் உறுப்பினராக 198 வாக்குகளால் தெரிவாகியிருந்தார். இந்த நிலையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். இந்த சம்மேளனத்தில் 207 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (ந-5)

# இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விரைவில்

## அகாஷியிடம் றோகித உறுதி

(கொழும்பு)

அரசாங்கம் விரைவில் அனைத்துக் கட்சிக் குழுவினூடாக இனப்பிரசசினைககான அரசியல் தீர்வை முன்வைக்கும் என வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியை நேற்றுக் கொழும்பில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த அவர், இலங்கையில் சமாதான முனைப்புக்கள் குறித்து யப்பான் தனது வரவேற்பை வெளியிட்டதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை அரசியல் பாதைக்குக் கொண்டு வரமுயற்சிப்பதாக போகொல்லா கம மேலும் தெரிவித்தார். (ந-3)

# காரைநகரில் இன்று கல்வித் தினம்

(யாழ்ப்பாணம்)

கனடா காரை கலாசார மன்றத்தின் ஆதரவுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் கல்வித் தினம் இன்று காலை 9 மணிக்கு காரைநகர் யாழ்ரன் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் வே. தர்மரட்ணமும் சிறப்பு விருந்தினராகக் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலனும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரமும் பிரதேச செயலர் இரா. யோகநாதனும் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராதா கிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்வித் தின நிகழ்வில் மூத்த கல்வியாளர்களைக் கௌரவித்தல் மற்றும் கடந்த வருட சாதாரண தர மற்றும் உயர் தரத்தில் அதிவிசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களை பாராட்டிக் கௌரவித்தல் என்பனவும் இடம்பெறும். (ந-246)

# சாரதா சேவாச்சிரமத்தால் மாணவர்களுக்கு மாப்பால்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் இங்கிலாந்திலுள்ள ஸ்கொட் என்னும் அமைப்பின் நிதியுதவியுடன் கடந்த இரண்டு மாதங்களாக வாரத்தில் இரண்டு நாள்கள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை கல்வி கற்கும் 300 மாணவிகளுக்கு அங்கர் மாப்பால் வழங்கி வருகின்றது.

இச் செயற்பாடு மேற்படி கல்லூரி அதிபர் திருமதி இ.குட்டித் தம்பியின் அனுசரணையுடன் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் கடந்த 17 வருட காலமாக பாடசாலைகளுக்குப் பால் வழங்கும் பணியை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமம் சிறப்பாகச்செய்து வருவதாகவும் மேற்படி சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார். (கு)

# மகா சங்காபிஷேகம்

(பொன்னாலை)

அராலி - ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய நாவோத்ர சகஸ்ர மகா சங்காபிஷேகப் பெருவிழா நாளைக் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூஜையையடுத்து அழகிய பூந்தண்டிகையில் அம்பாள் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (ந-49)

# கேரளாவில் சிக்கின்குனியா கட்டுக்கடங்காமல் பரவுகிறது

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத்தில் சிக்கின்குனியா வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவிவருகிறது. நிலை மையை சமாளிக்க இராணுவ உதவி கோரப்பட்டுள்ளது. கேள்ர மாநிலத்தில் மழை கால மான ஜூன் முதல் ஆகஸ்ட் வரை நோய்கள் பரவுவது இயல்பான ஒன்றாகும்.

இந்த ஆண்டு மழைக்காலம் சமீபத்தில் தொடங்கியுள்ளதையடுத்து அங்கு வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவிவருகிறது. சென்னை மற்றும் செகந்திராபாத் ஆகிய நகரங்களிலி ருந்து இராணுவ மருத்துவக்குழு கேரளாவிற்கு விரைந்துள்ளது.

இதற்கிடையே கேரள அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி நிலைமை குறித்து ஆராய்ந்து வருகிறது. வைரஸ் காய்ச்சல் தாக்கத்தினால் இதுவரை 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

# அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி யாழ்.மாணவர்கள் 6 இடங்களில் முதலிடம்



ஆனந்தராசா ஹரிசங்கர்



கனகசுந்தரம் சரணிகா

(கொழும்பு)

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற 2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலி டத்தைப் பெற்றுள்ளனர்.

நேற்றைய தினம் கொழும்பில் இடம் பெற்ற போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்களின் பெயர் விப ரம் வருமாறு,

ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு I செல்வன் ஆனந்தராசா ஹரிசங்கர் (யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை),பேச்சு– பிரிவு I செல்வி கனகசுந்தரம் சரணிகா (யா/ இந்து ஆரம்ப பாடசாலை), நடனம் (தனி) பிரிவு III செல்வி ஜெ.பிரியவதனி (யா/வேம்படி மகளிர் கல்லூரி);

நடனம் (தனி) பிரிவு (V) செல்வி பா. அபிராமி (யா/இராமநாதன் கல்லூரி), நடனம் (தனி) பிரிவு II, செல்வி பா.ஜஸ்திகா (யா/ இராமநாதன் கல்லூரி), தமிழ்த்தினப் போட்டி இன்றும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ந)

# புங்குடுதீவில் மீட்கப்பட்ட சடலம் ஜிம்பிறவுண் அடிகளாருடையது அல்ல

## மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

புங்குடுதீவு கடற்கரைப் பகுதியில் கடந்த மார்ச் 14 ஆம் திகதி மீட்கப்பட்ட சடலம் காணாமல் போன கத்தோலிக்க மதகுருவான வண.பிதா ஜிம்பிறவுண் அடிகளாருடையது இல்லையென மருத்துவ அறிக்கை கூறுவ தாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டெடுக்கப்பட்ட சடலத்தின் உடற் பகுதி களும் ஜிம்பிறவுண் அடிகளாரது பெற்றோரின் குருதி மாதிரிகளையும் சோதித்துப் பார்த்தில் இரண்டும் வேறு பட்டிருப்பதாகவும் கூறப்படு கிறது. (ந-5)

# சாவகச்சேரியில் இளைஞன் சுட்டுக்கொலை

சாவகச்சேரி பெருங்குளம் சந்திப் பகுதி யில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணி யளவில் இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான சுப்பிரமணியம் சுரேந்திரன் (வயது 23) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர் களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

# குடும்பிமலையில் விமானத்தாக்குதல்

விமானப்படையினரின் இரு கிபீர் விமா னங்கள் குடும்பிமலைப் பகுதியில் வான் வெளிதாக்குதலை மேற்கொண்டுள்ளன.

நேற்று முற்பகல் 10 மணியளவில் குடும்பிமலை வான்பரப்பில் நுழைந்த கிபீர்விமானங்கள் நான்கு தடவைகள் வெவ்வேறான இடங்களில் தாக்குதலை நடத்தியுள்ளன. வான்வெளித்தாக்குதலில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின் றன. (ந)

# நாட்டு நிலைமையை விளக்க விசேட ஊடகவியலாளர் மாநாடு

## பிரதமர் ரட்ணசிறி கூட்டுகிறார்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமையை தெளிவுபடுத்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க இன்று விசேட ஊடகவியலாளர் மாநாட்டை கூட்டவுள்ளார். மாநாடு இன்று பிரதமர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கூட்டு நடவடிக்கைத் தளபதி எயார் மார்சல் டொனால் பெரேரா, பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன் சேகா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் விமானப்படைத் தளபதி, கடற் படைத் தளபதி மற்றும் குடிவரவு,குடியகல்வு கட்டுப்பாடு உட்பட தேசிய பாதுகாப்புத் தொடர் ப்பான உயர்மட்ட அதிகாரிகளும் கலந்துகொள் ளவுள்ளனர். (ந-3)

# நல்லூர் முருகனுக்கு சகஸ்ர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று காலை 6 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். மாலை 3 மணிக்கு திருக்கல் யாண உற்சவம் நடைபெற்று சுவாமி வீதி யுலா இடம்பெறும். (அ)

# ஐ.தே.கட்சியின் செயற்பாடுகள்...

தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் உரை யாற்றியுள் ளார்.

இதனால் கொழும்பின் பாதுகாப்பிற்கும் பெயர் குறிப்பிட்டு உரையாற்றிய பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற் பட்டுள்ளது. அவரது உரையில் நாட்டில் இடம் பெறுகின்ற கடத்தல் தொடர்பான சம்பவங்க ளுடன் கொழும்பு பிரதிப்பொலிஸ்மா அதிபரி ருக்கு தொடர்பு இருப்பதாக அவரது பெயரைச் சுட்டிக்காட்டி உரையாற்றி இருந்தார்.

இதனால் அவருக்கும் அவரது குடும்பத் தினருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதுடன் கொழும்பின் பாதுகாப்பிற்கும் பங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அமைந்துள்ளது. மிலே னியம் சிட்டி சம்பவத்துடன் தொடர்புடையவர் கள் தொடர்பாக அன்று கருத்து வெளியிட்ட தை அடுத்து மிலேனியம் சிட்டியுடன் தொடர் புடையவர்களுடைய வாகனம்,வீடுகள் தாக் கப்பட்டு அவர்களும் கொலை செய்யப்பட்ட னர்.

அதேவேளை பயங்கரவாத அச்சுறுத்தல் களுக்கு உள்ளாகி உள்ள கொழும்பு மாநக ரத்தின் பாதுகாப்பை பலப்படுத்திக்கொண்டி ருக்கின்ற படை வீரர்களின் மனதைக் குழப் பும் நடவடிக்கையாகவே இவரது உரை அமைந்துள்ளது.

அத்தோடு உரையில் குறிப்பிட்ட பெயர் களைக் கொண்ட பொலிஸார் மற்றும் அவ ரது குடும்பத்தினரை பொலிஸார் பின் தொடர் வார்கள்.மிலேனியம் சிட்டியுடன் தொடர்புடைய அதிகாரிகள் பலர் அச்சத்தின் காரணமாக இன்னமும் வெளிநாடுகளில் வாழ்ந்து வரு கின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் படையினரை மனதளவில் பலவீனப்படுத்தும் நோக்கில் உரைகளை ஆற்றி வருகின்றனர். ஆனால் படையினரோ இறைமையைப் பாதுகாக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வாறான செயற்பாடு கள் புலிகளுக்கே சாதகமாக அமையும். இந்த செயற்பாட்டை தமிழ்த்தேசிய கூட்ட மைப்பினர் செய்திருந்தால் நாங்கள் வரவேற் றிருப்போம்.

ஆனால் இறைமையுள்ள இந்த நாட்டை பாதுகாப்பதற்காக போராடிக்கொண்டிருக் கின்ற படையினரை ஐக்கிய தேசியக்கட்சி விமர்சித்துக் கொண்டிருக்கின்றது.

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைக ளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற படையின ரின் பெயர்களை வெளியிட்டது போல எதிர் காலத்தில் கிழக்கில் சேவை செய் கின்ற முக்கிய அதிகாரிகள் பெயர்களை நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டு உரையாற்று வதற்கு ஐக்கிய தேசியக்கட்சியினர் முயற்சி செய்ததாக எங்களுக்கு தகவல்கள் கிடைத் துள்ளன.

எனவே இவ்வாறான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு இந்த நாடாளுமன் றம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ந-5)

அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வலம்புரியில்

'நயினை நாகபூசணி அம்மன் பாமாலை'

வெளிவரும். நயினை அம்மனைத் துதி செய்யும் உங் கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி,

நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
வலம்புரி
இல.3 இரண்டாம் ஒழுங்கை
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# மனித உரிமை...

எ திரான மோதலின் போது ஏதேனும் ஒரு இடத்தில் கொள்கை மீறப்பட்டிருக்குமானால் தற்போதைய அரசாங்கம் அதனை சரிசெய்து கொள்ளும் எனத் தான் நம்புவதாகவும் குறிப்பிட்ட அவர்;தெற்கில் அடிக்கடி அரசாங்கங்கள் மாறு வதே சமாதான செயற்பாடுகள் மந்த நிலை அடையக் காரணம் என்றார்.

சமாதான செயற்பாடுகள் இலங்கையர்களாலேயே முன்னெடுத்துச் செல்லவேண்டும். சர்வதேச சமூகத்திற்கு அதற்கான வசதிகளை மாத்திரமே ஏற்படுத்த முடியும்.

இதேவேளை இலங்கையின் மனித உரி மை மீறல்களை கட்டுக்குள் கொண்டுவர அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார். (ந-3)

# ஹெகலிய ரம்புக்வெல...

விளக்கமளித்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தமிழ் மக்களின் விருப்பத்திற்கிணங்க அமைவாகவே பேருந்துகளில் ஏற்றப் பட்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட் டார்கள் என்று கூறினார்.

ஆனால் எதிர்வரும் புதன்கிழமை திருமணம் நடைபெற வுள்ள பெண் ஒருவரையும் இராணுவத்தினர் பலவந்தமாக பேருந்தில் ஏற்றி அனுப்பியுள்ளனர். தனக்குத் திருமணம் எனக் கூறியும் தான் அனுப்பப்பட்டதாக அந்தப் பெண் முறையிட் டுள்ளார்.

ஆகவே தமிழ் மக்களின் விருப்பத்திற்கு அமைவாகவே பேருந்துகளில் ஏற்றிச் செல் லப்பட்டார்கள் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல எவ்வாறு கூறினார்? அவர் இந்த அவையை தவறாக வழிநடத்தியுள் ளார். ஆகவே அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல மீது நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவிசா ரணை நடத்தவேண்டும் என்றார் அவர். (ந-5)

# 30 புலிகளை...

சடலங்களும் ஒரு தொகுதி ஆயு தங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இராணுவத் தரப்பில் ஒரு சிப்பாய் கொல் லப்பட்டுள்ளார் என்றும் மேலும் 17 சிப்பாய் கள் காயமடைந்துள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக விடுத லைப்புலிகள் தரப்பிலிருந்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இதற்கிடையே வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புற சிங்களக் கிராமமான துட்டுவெள பகுதியில் அட்டம்பஸ்கட வீதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட இரண்டு பேருடைய சடலங்கள் கிடந்த இடத் தில் வைக்கப்பட்டிருந்த கிளைமோர் கண்ணி வெடி வெடித்ததில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்ததாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது. (ந-5)

சர்வசித்து வருடம் 27ம் நாள் (10.06.2007) ஞாயிற்றுக்கிழமை
9.00 மணி தொடக்கம் 10.30 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்
மங்களகரமாக ஆரம்பம்




Computer Sales, Computer Parts , Repairs, Networking & Maintenance

356B கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P :0775290521

# கொழும்பில்...

பெருந்தோட்டங்களில் இளைஞர் அணி அமைக்கும் ஏற்பாடுகளை தமது கட்சி மேற் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல்களில் எவரும் தம்முடன் இணையலாம் எனத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க இணையும் தரப்புடன் ஒப்பந்த அடிப்படையிலேயே வேலை செய்யப்போவ தாக மேலும் குறிப்பிட்டார். (ந-3)




வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.